CHILD OUTCOME SUMMARY (குழந்தை பெறுபேறு சுருக்கம், COS)
குடும்பத் தயாரிப்பு பணித்தாள்
EARLY SUPPORT FOR INFANTS AND TODDLERS (கைக்குழந்தைகள் மற்றும் தளர்நடை பருவத்தினருக்கான துவக்ககட்ட உதவி, ESIT)

## உங்கள் குழந்தையின் செயல்பாட்டு வளர்ச்சி

நீங்களும் உங்கள் வழங்குநர் குழுவும் எப்படி உங்கள் குழந்தை சராசரியான குடும்ப நடைமுறைகள் மற்றும் செயல்பாடுகளில் செயல்பாட்டு வழியில் பங்கேற்பது எனத் தீர்மானிப்பீர்கள். உதாரணமாக உங்கள் குழந்தை ஒரு சில வார்த்தைகளை மட்டுமே பயன்படுத்தக்கூடும். ஆனால் உங்களுடன் தொடர்புகொள்ள, சைகை மொழி, சப்தங்கள், உங்கள் கையை எடுத்துக்கொள்வது அல்லது சுட்டிக்காட்டுவது போன்ற பிற பயனுள்ள வழிகளை அது கொண்டிருக்கலாம்.

நீங்களும் உங்கள் குழுவும் உங்கள் குழந்தையை நன்கு அறிந்த நீங்கள் கொண்டுவரும் தகவல்களைப் பயன்படுத்துவீர்கள். நிபுணர்கள் மற்றும் பிற பராமரிப்பாளரின் அவதானிப்புகள், மதிப்பீட்டுக் கருவிகள் மற்றும் பலவற்றையும் நீங்கள் பரிசீலிப்பீர்கள். குழந்தை வீட்டில் வெற்றிகரமாக இருப்பதற்கு, சமுகத்திலும் குழந்தைப் பராமரிப்பு அல்லது பாலர்பள்ளி போன்ற இடங்களிலும், மூன்று பகுதிகளில் அவர்களுக்கு வலுவான திறமைகள் தேவை:

1. நேர்மறையான சமூக உறவுகள்
2. புதிய திறமைகளைப் பெறுவதும் பயன்படுத்துவதும்
3. அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்

### செயல்பாட்டுத் திறமைகள் என்றால் என்ன?

உங்கள் குழந்தையிடம் என்ன திறமைகள் என்று வெறுமனே தெரிந்திருப்பதைவிட, அவற்றை நாள் முழுவதும் அர்த்தமுள்ள விசயங்களைச் செய்து முடிப்பதில் அவர்கள் எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என அறிய விரும்புகிறோம். உதாரணமாக, உங்கள் குழந்தையால் எத்தனை வார்த்தைகளைச் சொல்லமுடியும் என்பது முக்கியம். ஆனால் அவர்களுக்கு உணவு வேண்டுமென்பதை அல்லது ஒரு புத்தகத்தில் படங்களின் பெயரைச் சொல்வதில் வார்த்தைகளை எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்று தெரிந்துகொள்வது மேலும் அர்த்தமுடையது.

### முடிவுகாண் மரவுரு என்றால் என்ன?

முடிவுகாண் மரவுருவானது உங்களுக்கும் உங்கள் குழுவுக்கும் உங்கள் குழந்தை மேலே பட்டியலிடபட்ட மூன்று பகுதிகளில் உங்கள் குழந்தை மற்ற குழந்தைகளுடன் ஒப்பிட எவ்வாறு செயல்படுகிறது என்பதை நன்கு விவரிக்கும் ஒரு கூற்றினைத் தேர்ந்தெடுக்க உதவும். இந்தத் தகவலை என்ன சேவைகள் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் என்பதைத் தீர்மானிக்கவும் உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் ஒரு திட்டத்தை உருவாக்கவும் பயன்படுத்துவோம்.

## முடிவுகாண் மரத்தைப் பயன்படுத்தும்போது மனதில் கொள்ள வேண்டியவை

- வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு மக்களிடத்தில் அன்றாட நடவடிக்கைகளில் பங்கெடுப்பதற்குச் செயல்பாட்டுத் திறமைகளை எவ்வாறு குழந்தை பயன்படுத்துகிறது என்பது குறித்துச் சிந்தியுங்கள்.
- குழு தேர்ந்தெடுக்கும் கூற்றானது பின்வருவனவற்றின் அடிப்படையில் உங்கள் குழந்தையின் செயல்பாட்டினைப் பிரதிபலிக்கவேண்டும்:
    - ஒரு குறிப்பிட்ட அமைப்பில் உங்கள் குழந்தைக்கான எதிர்பார்ப்புகள். வீட்டில் அவர்களது வயதில் எதிர்பார்க்கப்படும் அளவுக்கு உங்கள் குழந்தை செயல்பட்டால், தீர்மானிப்பதற்கு உங்கள் வீட்டுக் கலாச்சார எதிர்பார்ப்புகளைப் பயன்படுத்துங்கள்.
    - உதவித் தொழில்நுட்பம்/தழுவல்களை, அவை பொதுவாகக் கிடைக்கும் பட்சத்தில் அவர்கள் பயன்படுத்துவது (கேட்புக் கருவி, கண்ணாடிகள், நகரும் உதவிகள் போன்றவை). குழந்தையிடம் தொழில்நுட்பம் இருந்தால் ஏற்ற சூழ்நிலைகளில் அவர்களது வழக்கமான செயல்படும் தன்மை செயல்படாமல் இருப்பது.
    - குறைப்பிரசவத்தில் பிறந்திருந்தாலும் உங்கள் குழந்தையின் காலப்படியான வயது.



CHILD OUTCOME SUMMARY (குழந்தை பெறுபேறு சுருக்கம், COS)
குடும்பத் தயாரிப்பு பணித்தாள்
EARLY SUPPORT FOR INFANTS AND TODDLERS (கைக்குழந்தைகள் மற்றும் தளர்நடை பருவத்தினருக்கான துவக்ககட்ட உதவி, ESIT)

# குடும்பப் பணித்தாள்: எனது குழந்தையின் வளர்ச்சி மீது ஒரு பார்வை

## இந்தப் பணித்தாள் உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கான பலங்கள் மற்றும் வாய்ப்புகள் குறித்து நீங்கள் சிந்திக்க உதவும்

இந்த மூன்று வளர்ச்சிச் செயல்பாட்டுப் பகுதிகளில் உங்கள் குழந்தையிடம் நீங்கள் காணும் விசயங்களை கீழேயுள்ள கோடிட்ட இடங்களில் நிரப்புங்கள். உங்கள் குழந்தையிடம் தற்போதுள்ள திறமைகள் *மற்றும்* உங்கள் குழந்தை கற்றுக்கொள்ள வேண்டுமென நீங்கள் நினைக்கும் திறமைகளைப் பரிசீலியுங்கள். உங்கள் குழந்தை குறித்து *நீங்கள்* என்ன அறிந்திருக்கிறீர்கள் மற்றும் நம்புகிறீர்கள் என்பது மதிப்பீட்டிலும் IFSP குழு விவாதத்திலும் சேர்க்கப்படுவதும் முக்கியம்.

| | எனது குழந்தை எவ்வாறு… | எனது குழந்தையின் பலங்கள்… | வளர்ச்சிக்கான வாய்ப்புகள்… |
|---|---|---|---|
| 1: நேர்மறையான சமூக உறவுகள் | • மற்றவற்றுடன் தொடர்புபடுத்தல்<br>• உணர்ச்சிகளை வெளிக்காட்டல்<br>• தொடுவதற்கு எதிர்வினை<br>• இன்னொருவருடன் ஒரு நடவடிக்கையில் ஆர்வமுடன் இருப்பது<br>• ஒரு செயலில் இருந்து இன்னொன்றுக்குச் செல்வது<br>• அவர்களுக்குக் கூடுதல் கவனம் தேவைப்படும்போது நடத்தை மாற்றம்<br>• நடைமுறைகளையும் எதிர்பார்ப்புகளையும் புரிந்துகொள்வது<br>• முன் பின் விளையாட்டு விளையாடுவது<br>• ஏமாற்றத்தைக் கையாள்வது | | |

# CHILD OUTCOME SUMMARY (குழந்தை பெறுபேறு சுருக்கம், COS)
# குடும்பத் தயாரிப்பு பணித்தாள்
# EARLY SUPPORT FOR INFANTS AND TODDLERS (கைக்குழந்தைகள் மற்றும் தளர்நடை பருவத்தினருக்கான துவக்ககட்ட உதவி, ESIT)

| | | | |
|---|---|---|---|
| 2: புதிய திறமைகளைப் பெறுவதும் பயன்படுத்துவதும் | • ஒவ்வொரு அமைப்புகளிலும் வார்த்தைகளைப் பயன்படுத்துவது<br>• ஒரு பிரச்சினையைத் தீர்ப்பது (அவர்களால் எட்டமுடியாத ஒன்றைப் பெறுவது)<br>• வழிகாட்டுதல்கள் மற்றும் கோரிக்கைகளைப் புரிந்துகொள்வது மற்றும்/அல்லது பதிலளிப்பது<br>• மற்றவர்களைப் போலச் செய்வது<br>• கேள்விகளுக்குப் பதிலளித்தல்<br>• புத்தகங்கள், படங்கள், பொருட்கள் பயன்படுத்துதல் | | |
| 3: அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்; | • அடிப்படைத் தேவைகளைக் கவனித்துக்கொள்வது<br>• அவர்கள் என்ன விரும்புகிறார்கள் என்ன தேவை என்று உங்களுக்குத் தெரியப்படுத்துவது<br>• அபாய விழிப்புணர்வைக் காட்டுவது<br>• ஓரிடத்திலிருந்து இன்னொன்றுக்கு அவர்களை நகரச் செய்வது<br>• பொம்மைகளுடன் விளையாட அவர்கள் கைகளைப் பயன்படுத்துங்கள் | | |
| **பரிசீலனைக்கான கூடுதல் கேள்விகள்** | | • எந்த நடவடிக்கைகளை அல்லது ஆட்களை எனது குழந்தை விரும்புகிறது?<br>• தான் விரும்புவது என்ன என்பதை எனது குழந்தை எவ்வாறு எனக்குத் தெரியப்படுத்துகிறது?<br>• எப்போது எனது குழந்தை மிகவும் ஒத்துழைக்கிறது?<br>• எனது குழந்தையை அமைதிப்படுத்துவது எது? | • எந்த நடவடிக்கைகளை அல்லது ஆட்களை எனது குழந்தை விரும்பவில்லை?<br>• தான் எதை விரும்பவில்லை என்பதை எனது குழந்தை எவ்வாறு எனக்குத் தெரியப்படுத்துகிறது?<br>• எனது குழந்தையை பயமுறுத்துவது எது?<br>• எனது குழந்தைக்கு மன உளைச்சலைத் தருவது எது? |